සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 06 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 16 T

சுட்டெண்/ பெயர் ............................................

# இஸ்லாம்

நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. ''ஈமான்'' என்ற அரபுப்புதத்தின் பொருள்
(I) உண்மை (ii) நம்பிக்கை (iii) ஒழுக்கம் (iv) அன்பு

02. ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்களுள் இரண்டாவது அம்சம்
(I) அல்லாஹ்வை (ii) றஸுல்மார்களை (iii) மலக்குமார்களை (iv) வேதங்களை

03. அல்லாஹ்விடமிருந்து நபிமார்களுக்கு வஹியைக் கொண்டு வந்தவர்
(I) மீக்காயீல் (அலை) (ii) ஜிப்ரீல் (அலை) (iii) ரகீப் (அலை) (iv) அதீத் (அலை)

04. மறுமை பற்றிய நம்பிக்கையைக் குறிக்கும் பதம்
(I) தௌஹீத் (ii) ரிஸாலத் (iii) மஆத் (iv) தம்ஜீத்

05. அல்லாஹ்வினால் இவ்வுலகில் படைக்கப்பட்ட முதல் மனிதன்
(i) ஆதம் (அலை) (ii) ஈஸா (அலை) (iii) மூஸா (அலை) (iv) தாவூத் (அலை)

- **சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் இடுங்கள்.**

06. நாம் வாழும் பூமியைப்படைத்தவன் அல்லாஹ். ( )
07. இஸ்லாத்தின் கடமைகள் ஆறு ஆகும். ( )
08. வசதி உள்ளவர்கள் ஹஜ் செய்ய வேண்டும். ( )
09. இஸ்லாத்தின் இரண்டாவது கடமை நோன்பு. ( )
10. ''சுத்தம்'' ஈமானின் பாதியாகும். ( )

- **இடைவெளிக்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. துர்குணங்களுள் அடங்காதது...................................... ஆகும்.
(i) பொறாமை (ii) பெருமை (iii) பொறுமை (iv) வஞ்சகம்

12. வுழுவின் பர்ளுகள் ..................................... ஆகும்.
(I) ஐந்து (ii) ஆறு (iii) நான்கு (iv) மூன்று

13. இறைவனுக்கு இணை வைப்பவர்கள் .................................... எனப்பாகும்.
(i) காபிர் (ii) முஸ்ரிக் (iii) இப்லீஸ் (iv) முனாபிக்

14. இஸ்லாம் என்றால் ...................................... எனப்பொருள்படும்.
(i) சமாதானம் (ii) சண்டை (iii) அநீதி (iv) வேற்றுமை

15. வுழுவை முறிக்கும் காரியங்கள் ..................................... எனப்படும்.
(I) ஷர்த்துக்கள் (ii) முப்திலாத் (iii) சுன்னத் (iv) வாஜிப்

- **இணைக்குக**

| | |
|---|---|
| 16. மண்ணினால் படைக்கப்பட்டவர்கள் | ஷஹாதா |
| 17. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்காகச் சொல்கின்ற உறுதிமொழி | மனிதர்கள் |
| 18. இஸ்லாத்தின் இறுதிக்கடமை | மலக்குகள் |
| 19. செல்வத்தைத் தூய்மையாக்கும் கடமை | ஹஜ் |
| 20. ஒளியினால் படைக்கப்பட்டவர்கள் | ஸக்காத் |

(2 x 20 = 40 புள்ளிகள்)



kalvi.lk

- பகுதி II

- **முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுங்கள்.**

01. (i) நாம் ஈமான் கொள்ள வேண்டிய விடயங்கள் எத்தனை?
    (ii) தவ்ஹீதின் எதிர்ப்பதம் என்ன?
    (iii) மலக்குகளின் தலைவர் யார்?
    (iv) காற்று, நீர், நெருப்பு போன்றவற்றிக்குப் பொருப்பாயிருக்கும் மலக்கின் பெயர் என்ன?
    (v) ‘‘மாஉன் தஹூர்’’ என்றால் என்ன?
    (vi) குழப்பம் விளைவிக்கும் ஷைத்தான்களின் தலைவன் யார்?
    (vii) இவ்வுலகில் அல்லாஹ்வின் பிரதிநிதி யார்?
    (viii) நீரைப்பயன்படுத்த முடியாத போது எவ்வாறு தொழுகையை நிறைவேற்ற வேண்டும்?
    (ix) ஒரு முஸ்லிம் தொழுகையை ஆரம்பிக்க வேண்டிய ஆகக்குறைந்த வயது என்ன?
    (x) தொழாதவர்களை நுழையச் செய்யும் நரகின் பெயர் என்ன?

(2 x 10 = 20 புள்ளிகள்)

02. (i) நபிமார்களுள் விசேடமானவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?
    (ii) ஆதம் (அலை) அவர்களின் மனைவியின் பெயர் என்ன?
    (iii) நபிமார்கள் நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக. (3+3+4 = 10 புள்ளிகள்)

03. (i) ஜிப்ரீல் (அலை) அவர்களின் சிறப்புப் பெயர் ஒன்றைத் தருக.
    (ii) ஸூர் உதும் மலக்கின் பெயர் என்ன?
    (iii) மனிதர்களுக்கும், மலக்குகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

(3+3+4 = 10 புள்ளிகள்)

04. (i) பர்ளான நோன்பு எம்மாதத்தில் நோற்கப்படும்?
    (ii) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு அல்லாஹ்வால் வழங்கப்படும் சன்மானம் எது?
    (iii) இல்லாத்தின் கடமைகளைக் குறிப்பிடுக. (3+3+4 = 10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

05. (i) உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் அமல்கள் இரண்டு தருக.
    (ii) நஜீஸின் வகைகளைக் குறிப்பிடுக.
    (iii) சாதாரண நஜீஸிற்கு நான்கு உதாரணங்கள் தருக. (3+3+4 = 10 புள்ளிகள்)

•



kalvi.lk

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 06 - இஸ்லாம்**
**விடைப்பத்திரம்**

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 01. நம்பிக்கை | 02. மலக்குமார்களை | 03. ஜிப்ரீல் (அலை) | 04. மஆத் |
| 05. ஆதம் (அலை) | 06. √ | 07. x | 08. √ |
| 09. x | 10. √ | 11. பொறுமை | 12. ஆறு |
| 13. முஷ்ரிக் | 14. சமாதானம் | 15. முப்திலாத் | 16. மனிதர்கள் |
| 17. ஷஹாதா | 18. ஹஜ் | 19. ஸக்காத் | 20. மலக்குகள் |

## பகுதி II

01. (i) ஆறு
(ii) ஷிர்க்
(iii) ஜிப்ரீல் (அலை)
(iv) மீக்காயில் (அலை)
(v) மிகச்சுத்தமான நீர்
(vi) இப்லீஸ்
(vii) மனிதன்
(viii) தயம்மம் செய்து
(ix) ஏழு
(x) ஸகர்

02. (I) றஸுூல்மார்கள்
(ii) ஹவ்வா (அலை)
(iii) பொருத்தமான விடைகள் இருப்பின்.

03. (i) அர் - ரூஹ் , நாமூஸுூல் அஃழம் , ரூஹுூல் குத்ஸ்
(ii) இஸ்ராபீல் (அலை)
(iii) - மனிதர்கள் மண்ணினால் படைக்கப்பட்டுள்ளார்கள்.
- மலக்குகள் ஒளியினால்
- மனிதர்களில் ஆண் பெண் வேறுபாடு உண்டு. மலக்குகளில் ஆண்களுமல்வர் , பெண்களுமல்வர்.

04. (i) ரமழான் மாதத்தில்
(ii) சுவர்க்கம்
(iii) கலிமா , தொழுகை , ஸக்காத் , நோன்பு , ஹஜ்

05. (i) :- அல்குர்ஆன் ஓதுதல் :- திக்ர் செய்தல்
:- தஸ்பீஹ் செய்தல் :- ஸலவாத் கூறுதல்
:- பாவமன்னிப்பு கோரல்
(ii) 1. கடுமையான நஜீஸ்
2. சாதாரன நஜீஸ்
3. இலகுவான நஜீஸ்
(iii) இரத்தம், வாந்தி, மதுபானம், மலம், சலம், செத்தபிராணி

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457